# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழறிஞர்களும்

## தொகுதி – III



பதிப்பாசிரியர்கள்

**முனைவர் க. முருகேசன்**
**முனைவர் சு. குமரன்**
**முனைவர் கே. சுபாஷினி**
**முனைவர் சு. இராமலிங்கம்**

# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழறிஞர்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் கே. சுபாஷினி**<br>**முனைவர் சு. இராமலிங்கம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2017 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | X + 460 = 470 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 85267 - 38 - 3**

## International Conference on Tamil Literature and Tamil Scholars of the 20th Century

| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. K. Subhashini. Dr. S. Ramalingam** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | December, 2017 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | X + 460 = 470 |
| Prize | : | **Rs. 350/-** |

256. வ. தமிழ்ச்செல்வி 1159
பட்சி என்னும் முனைவர் கு.சரோஜா வாழ்வியல் குறிப்பும் இலக்கியப் பணியும்

257. முனைவர் சௌ. கீதா 1163
சுந்தரராமசாமி படைப்புகள்

258. முனைவர் வேல். கார்த்திகேயன் 1166
பதிப்புச் செம்மல் உ.வே.சா.

259. முனைவர் பொ. இரமேஷ் 1171
கு. அருணாசலக் கவுண்டரின் தமிழ்த்தொண்டுகள்

260. முனைவர் க. முருகேசன் 1177
பாம்பன் சுவாமிகளின் சிறுநூற்றிரட்டில் பாடுபொருள்

261. மரிக்கண் 1183
திருநங்கை எழுத்தாளர் பிரியா பாபுவும் தமிழ் இலக்கியப் பணிகளும்

262. சி.க. ரேணுகா 1186
பள்ளி பயிலா பகலவன் பண்டிதமணியின் வாழ்வியல்

263. கா. கனிஸ்கண்ணன் 1188
இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ்ச் சிறுகதைகளில் பெண் எழுத்து

260

# பாம்பன் சுவாமிகளின் சிறுநூற்றிரட்டில் பாடுபொருள்

முனைவர் க. முருகேசன்
தமிழ்த்துறைத் தலைவர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029

பாம்பன் சுவாமிகளால் 1926ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மஹாதேஜோ மண்டலத்தின் மூலமாகச் சுவாமிகள் அருளிய அருட்கொடைகள் வெளியிடப்பட்டுள்ளன. தம்முடைய நூல்கள் பலவற்றிற்குத் தாமே உரையும் எழுதியதோடு, அடியார் பெருமக்களைக் கொண்டும் உரைகள் தோன்றுவதற்கு வழிகாட்டியுள்ளார். எவ்வுயிருக்கும் அன்பு செய்யும் அருள் உள்ளம் கொண்ட அடியார் சமுதாய மக்களுக்குப் பல்வேறு நல்லறங்களைப் போதித்தார். அவருடைய ஆறுமண்டலப் பகுப்பில் நான்காம் மண்டலமாகக் கருதப்படும் 1015 பாக்களைக் கொண்ட தொகுப்பில் அடங்கியுள்ள நூல் விவரங்களையும், அவை நுவலும் பாடுபொருள் நெறிகளையும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

அன்றாட வாழ்க்கையில் மனித மேம்பாட்டிற்கு நல்லொழுக்கம் முதலிய நற்பண்புகள் தேவையாகின்றன. நன்னெறிகளைச் சார்ந்த மனம் தூய்மையடைகின்றது. அத்தகைய மனம் படைத்தவன் ஞானப் பொருளைக் கேட்பதற்கும், அதனைப் புரிந்து கொள்வதற்கும் தகுதி பெற்றவன் ஆகிறான். ஆதலால், ஆன்மிக நெறியில் செல்பவனுக்கு அறநெறிகளாகிய நன்னெறிகளின்கண் நிற்பதும், பல்கால் பழகுவதும் இன்றியமையாதது.

மக்களுக்காகத்தான் சமயமும் வழிபாடும் திருக்கோயில்களும் என்ற போது மக்களை உயர்நெறிக்குக் கொண்டு சேர்ப்பது சமயத்தின் பணியாகின்றது. சமுதாயச் சிந்தனையை உட்கருவாகக் கொண்டுள்ள சுவாமிகளின் திருப்பாடல்கள் உயிர்க் கருணையையும் அன்பின் மேன்மையையும் மனதில் பதிய வைப்பதுடன், எதிர்காலச் சமுதாயத்தின் ஏற்றத்திற்கும் வழிகாட்டுகின்றன.

'எனக்குச் சாஸ்திரத்தில் நிச்சய புத்தியும், இதுதான் உண்மைப் பொருள் என்ற திண்மை நலமும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் நூல்களைப் படித்ததனால் உண்டாயின. அவருடைய நூல்கள் ஆறு மண்டலங்களாகும். இதில் பரிபூரணானந்த போதம் என்ற நூல் பதினான்கு சித்தாந்த சாஸ்திரக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. தகராலய ரகசியம் என்ற நூல் அவருடைய அனுபவமாகிய தகர வித்தையை விளக்குவது' என்று திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் பாம்பன் சுவாமிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

## நான்காவது மண்டலம்

ஒன்பது சிறு நூல்களை இணைத்து வரும் 1015 பாக்களைக் கொண்ட தொகுப்பே இந்நான்காவது மண்டலமாகும். வடிவில் சிறியதாகிய இந்நூல்